Scale Em Tempo 85 Style Ballad> 6-8 Slow Rock1

08. உயிர்த்தெழுந்தார்

உயிர்த்தெழுந்தார் மரணத்தை வென்றார் (மத் 28:6,ஏசா25:8)
சத்துருவின் அதிகாரம் உரிந்து கொண்டார் (கொலோ 2:15)
வானங்களிலும் பூமிதனிலும்
சகல அதிகாரம் பெற்றுக் கொண்டார் (மத் 28:18)

1

தீர்க்கதரிசனம் நிறைவேறவே (லூக் 18:31)
கிறிஸ்து சிலுவையில் பாடுபட்டு (1பேது 2:21)
மூன்றாம் நாளில் மரித்தோரிலிருந்து (அப் 10:40)
உயிர்த்தெழுந்தாரே - உயிர்த்தெ

2

சர்ப்பங்கள் தேள்களை மிதிக்கவும்
சத்துருவின் சகல வல்லமையும்
மேற்கொள்ள அதிகாரம் கொடுத்து நம்மை (லூக் 10:19)
மேன்மை படுத்தினாரே - உயிர்த்தெ

3

உலகம் முழுவதும் புறப்பட்டு போய்
சகல ஜாதியை சீஷராக்க (மத் 28:19)
சகல நாட்களும் உடன் இருப்பேன் என்று (மத் 28:20)
வாக்களித்தவரே - உயிர்த்தெ